NSW HEALTH

# ஊடக வெளியீடு

14 ஆகஸ்டு 2021

## இன்று மாலை 5 மணி முதல் நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியத்தில் வீட்டிலேயே தங்கியிருக்கும் உத்தரவுகள்

பெருகிவரும் கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து நியூ சவுத் வேல்ஸ் மக்களைக் காப்பாற்ற, அனைத்து நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியத்துக்கும் புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இது இன்று மாலை 5 மணி முதல் 22 ஆகஸ்டு 2021 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12:01 வரை அமலில் இருக்கும்.

நியூ சவுத் வேல்ஸ் தலைமைச் சுகாதார அதிகாரி டாக்டர் கெர்ரி சாண்ட் (Dr Kerry Chant) அவர்களின் புதுப்பிக்கப்பட்ட சுகாதார ஆலோசனையைப் பின்பற்றி, நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியத்தில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் வீட்டிலேயே தங்கியிருக்கும் உத்தரவுகள் பொருந்தும்.

இதன் பொருள் என்னவென்றால் நியூ சவுத் வேல்ஸ் முழுவதும் இன்று மாலை 5 மணி முதல், வீட்டிலேயே தங்கியிருக்கும் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும்.

இந்த புதிய உத்தரவு நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியத்தில் ஏற்கனவே இருக்கும் உத்தரவுகளுக்குப் பதிலாக இருக்கும்.

வெளியேறுவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தாலொழிய, அனைவரும் கட்டாயம் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். அவர்கள் வீட்டுக்கு வெளியிலிருந்து குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் உட்பட எந்த விருந்தினர்களையும் அழைக்க முடியாது.

பராமரிப்பாளர்களின் பொறுப்புகளை நிறைவேற்ற அல்லது பராமரிப்பை அல்லது உதவியை வழங்க அல்லது கருணை அடிப்படையிலான காரணங்களுக்காக ஒரே நேரத்தில் ஒரு பார்வையாளரை மட்டும் வைத்திருக்கலாம். இதில் இரண்டு நபர்கள் உறவில் இருந்து, ஒன்றாக வாழாமல் இருப்பதும் அடங்கும்.

மதுபானக் கடைகள் (pubs), உணவகங்கள் (restaurants), மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் (cafes) உள்ளிட்ட, இதில் கையோடு எடுத்துச் செல்லும் உணவுகள் (takeaway) தவிர்த்து, அனைத்து விருந்தோம்பல் வளாகங்களும் கட்டாயம் மூடப்பட வேண்டும்.

பின்வருவனவற்றைத் தவிர சில்லறை விற்பனை நிலையங்கள் மூடப்பட வேண்டும்:

- பல்பொருள் அங்காடிகள் (supermarkets) மற்றும் மளிகைக் கடைகள்,
- பெரும்பான்மையாக உணவு அல்லது பானங்களை விற்கும் கடைகள் எ.கா. இறைச்சிக் கடைகள், ரொட்டிக் கடைகள், பழக்கடைகள், மற்றும் நற்சுவை உணவுக் கடைககள் (delicatessens), ஆனால் இதில் உணவகங்கள் (restaurants) அல்லது சிற்றுண்டிச்சாலைகள் (cafes) அடங்காது.

- மருந்துச்சாலைகள் (chemists) மற்றும் மருந்தகங்கள் (pharmacies),
- பெட்டிக் கடைகள் (kiosks)
- பெரும்பான்மையாக அலுவலகப் பொருட்கள், செல்லப் பிராணிக்கான சாமான்கள், செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் மற்றும் எழுதுபொருட்கள், மதுபானம், மகப்பேறு மற்றும் குழந்தைக்கான பொருட்கள், மருத்துவ அல்லது மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகள்
- உணவு மற்றும் பானம் விற்கும் வளாகங்கள், ஆனால் கையோடு எடுத்துச் செல்லும் உணவுகளை (takeaway) மட்டும் விற்கலாம்
- நிலவறைக் (cellar) கதவு வளாகங்கள், ஆனால் கையோடு எடுத்துச் செல்வது மட்டும் விற்கலாம்
- இரும்புச் சாமான்கள் (hardware) மற்றும் கட்டுமானப் பொருட்கள்
- நிலப்பரப்பைச் சமனப்படுத்தும் (landscaping) பொருட்கள்
- நாட்டுப்புறப் பொருட்கள் (rural supplies)
- மரக் கிடங்குகள் (timber yards)
- தோட்ட மையங்கள் மற்றும் செடி வளர்ப்புப் பண்ணை (plant nurseries),
- வாகனங்களை வாடகைக்கு விடும் வளாகங்கள், வாகனங்களை விற்பனை செய்யும் வளாகங்கள் தவிர்த்து,
- பெரும்பான்மையாக கைப்பேசி பழுதுபார்க்கும் கடைகள்.

---

**நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை ஊடகம் (NSW HEALTH** Media)

தொலைபேசி. 02 9391 9121 வேலைநேரத்துக்குப் பின். 02 9962 9890 தொலைநகல். 02 9391 9575 வலைத்தளம். www.health.nsw.gov.au

*healthdirect* AUSTRALIA – நியூ சவுத் வேல்ஸில் வசிப்பவர்களுக்கு ஒரு நாளில் 24 மணி நேரமும் கைதேர்ந்த சுகாதார ஆலோசனைகளை வழங்குதல் – தொலைபேசி. 1800 022 222

எரிபொருள் சேவை நிலையங்கள் (service stations), வங்கிகள், அஞ்சல் நிலையங்கள், சலவை நிலையங்கள் (laundromats) மற்றும் உலர்சலவையங்கள் (drycleaners) திறந்திருக்கும்.

வீட்டை விட்டு வெளியே செல்லும் எவராயினும் தங்களுடன் முகக்கவசம் ஒன்றை எப்போதும் எடுத்துச் செல்ல வேண்டும். வெளியிடங்களில் வேலைசெய்யும்போது பள்ளியில் பணிபுரிவோர், வெளிப்புறச் சந்தைகளில், வெளிப்புறக் கடை வரிசைகளில் உள்ள அனைத்து மக்கள், மேலும் காஃபி மற்றும் உணவுக்காக வெளியிடங்களில் காத்திருப்போர் அனைவரும்  முகக்கவசங்களை அணிந்திருக்க வேண்டும்.

நியூ சவுத் வேல்ஸ் முழுவதுமுள்ள ஒவ்வொரு வேலை அமர்த்துநரும் தங்களுடைய ஊழியர்களை, நியாயமாக நடைமுறைப்படுத்த முடியாத பட்சத்தில், கட்டாயம் வீட்டிலிருந்தே வேலை செய்யவைக்க வேண்டும்.

வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறுவது ஒரு நியாயமான சாக்குதான் – ஆனால் அது வீட்டிலிருந்து கொண்டே வேலை செய்வது நடைமுறையில் முடியாத காரியம் என்றால் மட்டுமே.

ஏற்கனவே முழு அடைப்புக்கு உட்படுத்தப்படாத பிராந்தியப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகளுக்கு ஒருநாள் 'சலுகைக் காலம்' உண்டு. அந்த நிகழ்வுகள் 16 ஆகஸ்டு 2021 திங்கட்கிழமை அதிகாலை 12.01 மணி வரை தொடரலாம், ஆனால் ஏற்கனவே முழு அடைப்புக்கு உட்படுத்தப்படாத பகுதிகளைச் சேர்ந்த விருந்தினர்கள் மட்டுமே இருக்கவேண்டும். திங்கட்கிழமை முதல், 10 நபர்கள் (சடங்கை நடத்தும் நபர்களைத் தவிர) பங்கேற்கும் சிறிய இறுதிச் சடங்குகள் மற்றும் நினைவு விழாக்கள்  மட்டுமே அனுமதிக்கப்படும்.

மிகவும் லேசான ஜலதோஷம் போன்ற அறிகுறிகள் (cold-like symptoms) இருந்தாலும் கூட பரிசோதனை செய்துகொள்ள முன்வருமாறு  நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை மக்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

நியூ சவுத் வேல்ஸ் முழுவதும் 440 -க்கும் மேற்பட்ட கோவிட்-19 பரிசோதனை செய்யும் இடங்கள் உள்ளன, அவற்றில் பல, வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும். உங்களுக்கு மிக அருகில் உள்ள பரிசோதனை நிலையத்தைக் கண்டறிய எங்களது வலைத்தளத்துக்குச் செல்லவும்.

சிட்னி பெருநகரில் (Greater Sydney) உள்ள பாதிக்கப்பட்ட உள்ளூர் அரசுப் பகுதிகளுக்குச் சிறப்பு விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன.

மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து பின்வரும் வலைத்தளத்தைக் காணவும்: nsw.gov.au/covid-19/rules.